**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ஆம் நாள் திங்கட்கிழமை

CC. No. 107 of 2025

CNR No. TNTV15-000630-2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 449/2024 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

மோகன், 28/2026,
த/பெ. ராமு,
குவாலங்காட்டு தெரு,
குடவாசல். ------ எதிரி

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.107 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub-Inspector of Police, Kodavasal PS. in Cr.No.449/2024 |
| 3. | Name of the accused | R.Mohan |
| 4. | Father's Name | S/o. Ramu |
| 5. | Occupation | - |
| 6. | Residence | Kuvalankattu Street, Kodavasal |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:07:55 +0530

<table>
<tr><td>7.</td><td>Age</td><td>28/26</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td>17.11.2024</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td>18.11.2024<br>18.11.2024</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td>18.11.2024</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td>08.01.2025</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td>Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 230 BNSS.</td><td>14.08.2025</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td>On 29.08.2025 the accused questioned on substance of accusation 296(b),118(1),351(2) BNS. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td>15</td><td>Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td><table>
<tr><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>23.09.25</td><td>06.03.26</td></tr>
<tr><td>PW2</td><td>23.09.25</td><td>06.03.26</td></tr>
<tr><td>PW3</td><td>23.09.25</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>24.03.26</td><td>24.03.26</td></tr>
</table></td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 351 BNSS of the code – Closed of trial</td><td>25.03.26</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td>முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு 296(b),118(1),351(2) BNS வின் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:00 +0530

| | | |
|---|---|---|
| | | 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி. K.M.ஸ்டாலின், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>** :-

1. குடவாசல் கிளார் தெருவை சேர்நத வாதி துரைராஜன் மனைவி சாட்சி 2 மைதிலி கடந்த 17.11.2024 ஆம் தேதி இரவு சுமார் 7.30 மணியளவில் அவரது பிள்ளைகளை டியுசனில் இருந்து வீட்டிற்கு அழைத்து கொண்டு வரும்போது எதிரி சாட்சி 2 யை ஏய் உன் புருஷன் எனக்கு பிராந்தி வாங்கி தர மாட்டேன் என்று சாட்சி 2 டிடம் தகராறு செய்தும் தகவல் கேள்விப்பட்டு வாதி சாட்சி 2 யை வீட்டிற்கு அழைத்து கொண்டு வந்த போது எதிரியாகிய நீர் சாட்சி 2 பின்னால் வந்து காமகுரோதமான வார்த்தைகளால் சாட்சி2 யையும் சாட்சி 3 யையும் திட்டியும், வாதி குடவாசல் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க மோகன் வீட்டிற்கு எதிரில் ரோட்டில் நடந்து வந்த போது அங்கு வந்த எதிரி வாதியை குச்சிக்காரி மகனே , தேவிடியா மகனே என திட்டி கையால் அடித்து



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:11 +0530

முள் வேலியில் தள்ளிவிட்டு சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், வாதி எழுந்து வந்த போது அவரது வெரகொட்டையை பிடித்து இழுத்து வாதிக்கு சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், வாதியை பார்த்து கொலை செய்து விடுவதாக மிரட்டியும் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 296(b)(2 counts), 118(2)(2 counts), 351(2) BNS ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் BNSS பிரிவு 230-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 296(b)(2 counts), 118(2)(2 counts), 351(2) BNS ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளி இல்லை என கூறினார். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது . எதிரி தரப்பில் எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது .



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:15 +0530

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெறும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் கிளார் தெருவில் குடியிருந்து கொத்தனாராக வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தனது பக்கத்து தெருவில் வசித்து வருகிறார் என்றும், கடந்த 17.11.2024ம் தேதி இரவு 07.30 மணியளவில் தனது மகன்கள் டியூசன் சென்றிருந்தவர்களை அழைத்து வருவதற்காக தனது மனைவி மைதிலி சென்றிருந்தார் என்றும், அப்போது ஆஜர் எதிரி மோகன் தனது மனைவியிடம் எங்கடி போற உன் வீட்டுக்காரனிடம் சொல்லி சரக்கு வாங்கி கொடுக்க சொல்லுடி என்று சொல்லி பேசிக்கொண்டிருந்த போது அதை தடுத்து தனது மனைவி கேட்டு விட்டு தனது மகன்களை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார் அப்போது தானும் தனது மனைவி மற்றும் மாமியார் சரோஜா ஆகியோருடன் இருந்த போது ஆஜர் எதிரி தன்னை பார்த்து குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், எதிரி தனது வீட்டு வாசலில் நின்று திட்டினார் என்றும், அவ்வாறு ஆஜர் எதிரி தன்னை திட்டியதால் தனக்கு அவமானம் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரி தன்னை கையால் அடித்து அருகில் உள்ள வேலியில் தள்ளவிட்டார் என்றும், ஆஜர் எதிரி தனது வேட்டிக்குள் கையை விட்டு தனது விறைப்பையை கிழித்துவிட்டார் என்றும், அவ்வாறு கிழித்ததில் தனக்கு இரத்த காயம் ஏற்பட்டது என்றும், தனக்கு இரத்தம் அதிகமாக வந்ததால் தன்னால் தாங்க முடியாத அளவுக்கு வலி ஏற்பட்டது என்றும், அங்கிருந்து எதிரி செல்லும் போது இன்னைக்கு தப்பிச்சிட்டடா தன்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றார் என்றும், அவ்வாறு எதிரி தன்னை மிரட்டியதால் இன்று வரை ஏதாவது செய்துவிடுவாரா என்று தனக்கு அச்சமாக உள்ளது என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக குடவாசல் அரசு



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:22 +0530

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றும், தான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது குடவாசல் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள விபரம் தான் சொன்னதுதான் என்றும், **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், தான் தொடர்ந்து திருவாரூர் அரசு மருத்துவமனையில் 28 நாட்கள் வரை சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் கிளார் தெருவில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தனது பக்கத்து தெருக்காரர் என்றும், அ.சா.1 தனது கணவர் என்றும், கடந்த 17.11.2024 ம் தேதி இரவு 07.30 மணிக்கு தனது மகன்கள் டியூசன் சென்றிருந்தவர்களை அழைத்து வருவதற்காக தான் சென்றிருந்தேன் என்றும், அப்போது ஆஜர் எதிரி மோகன் என்னிடம் உன் புருஷன் தனக்கு சரக்கு வாங்கி கொடுக்கமாட்டானா வாங்கி கொடுக்க சொல்லுடி என்று பேசினார் என்றும், பின்பு தான் தனது பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தேன் என்றும், அப்போது தனது வீட்டு வாசலுக்கு வந்த ஆஜர் எதிரி அங்கிருந்த தன்னையும் தனது கணவர் மற்றும் தனது தாயாரையும் பார்த்து குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், அவ்வாறு ஆஜர் எதிரி தங்களை திட்டியதால் தங்களுக்கு அசிங்கம் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரி தனது கணவரை கையால் அடித்து வேலியில் தள்ளவிட்டார் என்றும், அதன்பிறகு ஆஜர் எதிரி தனது கணவரின்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:27 +0530

விறைப்பையை கிழித்துவிட்டார் என்றும், அவ்வாறு கிழித்ததில் தனது கணவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது என்றும், அங்கிருந்து எதிரி செல்லும் போது இன்னைக்கு தப்பிச்சிட்டடா என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று எனது கணவரை மிரட்டி விட்டு சென்றார். அவ்வாறு எதிரி எனது கணவரை மிரட்டி சென்றால் தாங்களும் பயந்து கொண்டு தான் இருக்கிறோம் என்றும், காயமுற்ற தனது கணவரை சிகிச்சைக்காக குடவாசல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றும், இது சம்மந்தமாக குடவாசல் போலீசார் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் தற்போது வலங்கைமான் தாலுக்கா மாத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், அ.சா.1 துரைராமன் எனது மருமகன். அ.சா.2 மைதிலி தன்னுடைய மகள் என்றும், தனது மகளின் வீடு குடவாசல் கிளார் தெருவில் உள்ளது என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த ஆண்டு ஒரு நாள் தேதி சரியாக நினைவில்லை என்றும், தான் தனது மகள் வீட்டிற்கு சென்றிருந்தேன் என்றும், அப்போது ஆஜர் எதிரி தனது மகளையும் தனது மருமகனையும் புண்டா மகனே, குச்சிகாரி மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், எனது மருமகனை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், பிறகு தனது மருமகன் வேட்டிக்குள் கையைவிட்டு விறைப்பையில் கிழித்துவிட்டார் என்றும், அதில் அவருக்கு இரத்தம் வந்தது என்றும், தாங்கள் சத்தம் போட்டோம் என்றும், ஆஜர் எதிரி அங்கிருந்து செல்லும் போது திட்டிக்கொண்டே சென்றார் என்றும், காயமுற்ற தனது மருமகனை சிகிச்சைக்காக குடவாசல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:31 +0530

அழைத்து சென்றோம் என்றும், இது சம்மந்தமாக குடவாசல் போலீசார் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 18.11.2024 ம் தேதி மாலை 15.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்த போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வரப்பட்ட தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த துரைராஜன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து குடவாசல் காவல் நிலைய குற்ற எண்.449/2024 BNS பிரிவுகள் 296(பி), 118(2), 351(2) என் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், **தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், பின்பு தான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 18.11.2024 ம் தேதி சுமார் 04.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றும், அங்கிருந்த சாட்சிகளான பாலகிருஷ்ணன், விநாயகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது** என்றும், பின்பு பின்பு சாட்சிகள் மைதிலி, சரோஜா, பாலகிருஷணன் மற்றும் விநாயகம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், மேலும், இவ்வழக்கில் காயமுற்ற அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் சிவராமன் மற்றும் முகம்மது அலாவுதீன் என்பவரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்தேன் என்றும், **அந்த பதிவேடு மற்றும் காயச் சான்று அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:35 +0530

என்றும், தனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியான மோகன் என்பவரை 19.11.2024 ம் தேதி மாலை 05.30 மணியளவில் இவ்வழக்கின் குற்றம் காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து உரிய நடைமுறைக்கு பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இத்துடன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351-ன் படி வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் BNSS பிரிவு 359-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:40 +0530

சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

12. **<u>அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்</u>**:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான துரைராமன், இவ்வழக்கு எரவாஞ்சேரி காவல் சரகம் ஆழியன்தோப்பு மாதா கோவில் தெருவில் வசிக்கும் இவ்வழக்கின் புகார்தாரர் ஜாக்குலின்மேரியும் இவ்வழக்கின் எதிரியும் ஒரே தெருவில் பக்கத்து பக்கத்து வீட்டில் வசித்து வருபவர்கள் ஆவார்கள். எதிரி வீட்டில் சமைக்கும்போது உண்டலாகும் விறகு அடுப்பின் புகை புகார்தாரர் ஜாக்குலின்மேரியின் வீட்டிற்குள் வரும் அதனால் புகார்தாரரின் மாமியாரும் இவ்வழக்கின் சாட்சி 2 பொன்னரசுக்கு மூச்சுவிட சிரமமாக இருக்கும் இதனால் இருகுடும்பத்திற்கும் அடிக்கடி சண்டை வருவது வழக்கம். அதேபோல் கடந்த 09.03.25 ம் தேதி இரவு 07.30 மணியளவில் எதிரி வீட்டின் விறகு அடுப்பின் புகை எங்க வீட்டுக்கு வந்ததால் புகார்தாரர் ஜாக்குலின்மேரி எதிரி கேட்டதற்கு எதிரி புகார்தாரர் ஜாக்குலின்மேரியை பார்த்து என்னடி குச்சிகாரி தேவுடியா மகளே உன்னோட தினமும் இதே தொந்தவா போச்சு என்று கூறிக்கொண்டே வீட்டு வாசலில் கிடந்த கருங்கல்லை எடுத்து புகார்தாரரின் இடது புறநெற்றியில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் பின்னர் இதே போல தங்களிடம் தினம் தொந்தரவு கொடுத்துகிட்டே இருந்தன்னா உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டியும் குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

13. நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில், தான் தற்போது குடவாசல் கிளார் தெருவில் குடியிருந்து கொத்தனாராக வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தனது பக்கத்து தெருவில்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:44 +0530

வசித்து வருகிறார் என்றும், கடந்த 17.11.2024 ம் தேதி இரவு 07.30 மணியளவில் தனது மகன்கள் டியூசன் சென்றிருந்தவர்களை அழைத்து வருவதற்காக தனது மனைவி மைதிலி சென்றிருந்தார் என்றும், அப்போது ஆஜர் எதிரி மோகன் தனது மனைவியிடம் எங்கடி போற உன் வீட்டுக்காரனிடம் சொல்லி சரக்கு வாங்கி கொடுக்க சொல்லுடி என்று சொல்லி பேசிக்கொண்டிருந்த போது அதை தடுத்து தனது மனைவி கேட்டு விட்டு தனது மகன்களை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார் அப்போது தானும் தனது மனைவி மற்றும் மாமியார் சரோஜா ஆகியோருடன் இருந்த போது ஆஜர் எதிரி தன்னை பார்த்து குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், எதிரி தனது வீட்டு வாசலில் நின்று திட்டினார் என்றும், அவ்வாறு ஆஜர் எதிரி தன்னை திட்டியதால் தனக்கு அவமானம் ஏற்பட்டது என்றும், ஆஜர் எதிரி தன்னை கையால் அடித்து அருகில் உள்ள வேலியில் தள்ளவிட்டார் என்றும், ஆஜர் எதிரி தனது வேட்டிக்குள் கையை விட்டு தனது விறைப்பையை கிழித்துவிட்டார் என்றும், அவ்வாறு கிழித்ததில் தனக்கு இரத்த காயம் ஏற்பட்டது என்றும், தனக்கு இரத்தம் அதிகமாக வந்ததால் தன்னால் தாங்க முடியாத அளவுக்கு வலி ஏற்பட்டது என்றும், அங்கிருந்து எதிரி செல்லும் போது இன்னைக்கு தப்பிச்சிட்டடா தன்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றார் என்றும், அவ்வாறு எதிரி தன்னை மிரட்டியதால் இன்று வரை ஏதாவது செய்துவிடுவாரா என்று தனக்கு அச்சமாக உள்ளது என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக குடவாசல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றும், தான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது குடவாசல் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:48 +0530

கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள விபரம் தான் சொன்னதுதான் என்றும், **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், தான் தொடர்ந்து திருவாரூர் அரசு மருத்துவமனையில் 28 நாட்கள் வரை சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. ஆனால், அ.சா.1 ஐ மீண்டும் கு.வி.மு.ச. பிரிவு 311 படி நீதிமன்றத்திற்கு அழைத்து குறுக்கு விசாரணை செய்து அவர் தனது குறுக்கு விசாரணையில் "...................... நானும் எதிரியும் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் என்பதால் தற்போது சமாதானம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதான்." என்று சாட்சியமளித்துள்ளார்.

15. இவ்வாறு இருக்கையில், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 -ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்த போது அவர் தனது குறுக்கு விசாரணையில் "...................... சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கூட்டமாக இருந்தது என்றாலும் கூட்டத்தில் யார் என்னை தாக்கினார்கள் என்று தெரியாது என்றாலும் ஆஜர் எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் ஆஜர் எதிரி மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்."என்று தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு முன்னுக்கு பின் முரணாக பதிலளித்துள்ளார் என்பதை தெளிவாக காண முடிகிறது.

16. மேலும், இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டதாக தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:54 +0530

17. இந்நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் *Madan Mohan Abbot* ***Vs*** *State of Punjab reported in (2008) 4 SCC 582 : (2008) 2 SCC (Crl.) 464* என்ற வழக்கில் வழங்கியுள்ள முன்தீர்ப்பில் பத்தி 5-ல் பொதுவாக குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரும், எதிரியுடன் சமாதனமாக செல்லும்போது அவற்றை தீர்மானிப்பது குறித்து எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு :

> *"….We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and benefit of the technicalities of the law."*

18. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:08:58 +0530

19. எனவே, இவ்வழக்கில் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 296(b)(2 counts), 118(2)(2 counts), 351(2) BNS ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**உத்தரவு**

21. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 296(b)(2 counts), 118(2)(2 counts), 351(2) BNS ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22. எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:09:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.துரைராஜன் |
| அ.சா.2 | திருமதி. மைதிலி |
| அ.சா.3 | திரு. சரோஜா |
| அ.சா.4 | திரு. கணேசன், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 18.11.2024 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 18.11.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 18.11.2024 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | 18.11.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 17.11.2024 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.6 | 17.11.2024 | காயச் சான்று |

**எதிரி தரப்பில் சாட்சிகள்** :- இல்லை

**எதிரி தரப்பில் சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | 06.03.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| எ.சா.ஆ.2 | 06.03.2026 | சமாதான மனுவில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:09:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 18.11.2024 முதல் 08.01.2025 |

<table>
<tr><td>2.</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">29.07.2025</td></tr>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள்</td><td colspan="3">29.08.2025</td></tr>
<tr><td>4.</td><td>தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td colspan="3">எதிரி தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 348 BNSS-ன் கீழ் 14.10.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td rowspan="5">5.</td><td rowspan="5">சாட்சிகள் விசாரணை</td><td>Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW-1 :</td><td>23.09.25</td><td>06.03.26</td></tr>
<tr><td>PW-2 :</td><td>23.09.25</td><td>06.03.26</td></tr>
<tr><td>PW-3 :</td><td>23.09.25</td><td>-</td></tr>
<tr><td>PW-4 :</td><td>24.03.26</td><td>24.03.26</td></tr>
<tr><td>6.</td><td>BNSS பிரிவு 351-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">25.03.2026</td></tr>
<tr><td>7.</td><td>எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம்</td><td colspan="3">-</td></tr>
<tr><td>8.</td><td>மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள்</td><td colspan="3">-</td></tr>
</table>

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.03.30 17:09:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.